முன்னேற்றத்தைத் தடை செய்தால் கம்யூனிசம் ஆக்கம் பெறும்

Phone No 4502

விலை அரை அணா

Regd. No. M. 5458

இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (27—4—50) வெளியூர் (28—4—50) [இதழ் 237

தாழ்த்தப்பட்டோர் அல்லல் கண்டு அலட்சியமாய் இருத்தல் கூடாது

ஜாதி ஆணவம் ஒழிந்தாலன்றி சமுதாயம் சீர்பெறாது

கொடுமை தவிர்க்காமல் கோடிக்கணக்கில் செலவிட்டுப் பயன் என்ன ?

அமைச்சர் பரமேஸ்வரனின் அறிவுரையும் எச்சரிக்கையும்

பெரிய அரசியல் பதவிகளில் இருப்பது மாத்திரம் ஒரு சமுதாயத்தின் உயர்வைக் குறிப்பதாகாது. ஹரிஜனங்களைத் தம்மோடு சமமாக மதித்து நடத்தும் பண்பு ஒன்றே அவர்களுடைய சிறப்பைக் காட்டுவதாகும்.

மக்கள் தம்மை ஒரு தனி சமுதாயத்தைச் சேர்ந்தவர்களென்று கருதுவது கூடாது. எதிர்காலத்தில் அப்படிப்பட்ட மனப்பான்மை உகந்ததாகக் கருதப்படமாட்டாது. ஒருவர் தன்னை ஒரு தனி சமுதாயத்தைச் சேர்ந்தவரென்று எண்ணிக்கொள்ளுவாராகில், அவர் தாம் மேற்கொள்ளும் தொண்டைச் செய்யமுடியாதவராகும்.

உயர் ஜாதிக்காரர்கள் ஹரிஜனங்களை முன்னேறவிடாமல் தடுத்து வருவார்களானால், கம்யூனிஸ்டுகள் இந்த நிலையைத் தமக்குச் சாதகமாக்கிக்கொள்வார்கள். உயர் ஜாதிக்காரர்கள் தமது பொறுப்பை உணரவேண்டிய காலம் மிக மிக நெருங்கிவிட்டது. ஜாதி ஹிந்துக்கள் தம்முடைய உயர்வு மனப்பான்மையை விட்டொழிக்காத வரை, ஹரிஜன முன்னேற்றத்துக்கென கோடிக்கணக்கில் செலவிடுவதில் பயனில்லை ''

என்று, ஹரிஜன முன்னேற்ற அமைச்சர் தோழர் பி. பரமேஸ்வரன் உதகையில் தோழர் வி. ஐ. முனுசாமி பிள்ளை அளித்த தேநீர் விருந்திற்குப் பதில் அளிக்கும் முகத்தான் பேசியுள்ளார்.

அவர் மேலும் பேசுகையில், ''தாழ்ந்தப்பட்ட சமுதாயம் நீண்டகாலமாக வறுமையால் வாடுகிறது. இதனை யாரும் அலட்சியப்படுத்துவதற்கில்லை'' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரின் இந்தப் பேச்சு உயர்ஜாதிக்காரர்களுக்கு நல்லதோர் அறிவுரையாக மட்டுமின்றி சரியான எச்சரிக்கையாகவும் அமைந்துள்ளது.

ஹரிஜனங்களின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடப்படுமானால், கம்யூனிஸ்டுகளின் கை ஓங்க நேரிடும் என்று அமைச்சர் கூறியிருப்பது, அரசியல் அறிவுடைத்தோர் அனைவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டிய விஷயம்.

தாழ்த்தப்பட்டோர் என்று இந்நாட்டில் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் மக்களின் எண்ணிக்கை எட்டு கோடி.

இந்த எட்டு கோடி மக்கள் சமுதாயத்தில் உரிமையோடு தலைநிமிர்ந்து வாழ முடிவதில்லை. அவர்களுடைய தன்மானம் உயர் ஜாதிக்காரர்களால் பறிக்கப்படுகிறது. அவர்கள் பரிதாபத்துக்குரிய மக்களாய்க் காட்சி அளிக்கின்றனர். ஆனால், அவர்கள் தாம், நாட்டைத் திருத்தும் நற்பணி செய்பவர்கள். நிலந்திருத்தி, நெற்பயிர் விளைவிப்போர் அவர்களே. கல்லைப் பிளந்து,

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

இந்தியர்-ஆப்ரிக்கர் ஐக்கிய முன்னணி

—————(0)—————

வெள்ளையர் நிறத்திமிர் கொள்கைக்கு எதிர்ப்பு

நைரோபி, ஏப். 26—

தங்கனிகாவில் சில சீர்திருத்தங்கள் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டிருப்பதை வெள்ளையர்கள் எதிர்ப்பதைக்கண்டிக்க, கென்யாவிலுள்ள 3000 ஆப்பிரிக்கர்களும் ஏராளமான இந்தியர்களும் ஒரு ஐக்ய முன்னணி அமைத்து வேலைசெய்துவருகிறார்கள்.

கென்யா சட்டசபையைச் சேர்ந்த இவர்களில் சிலர் நைரோபியில் நடந்த பொதுக்கூட்டத்தில் ஒரே மேடையில் பேசினர்.

கென்யா ஆப்பிரிக்க யூனியனின் கிழக்கு ஆப்பிரிக்க தேசீய காங்கிரஸ் இவைகளின் கூட்டு ஆதரவில் இக் கூட்டம் நடைபெற்றது.

இந்தியர்களும், ஆப்பிரிக்கர்களும் சேர்ந்து வெள்ளையர்களைக்கண்டிக்க ஒன்றுபடுவதே இதுதான் முதல் தடவை.

நிறத்திமிர் கொள்கைக்கு எதிர்ப்பு அதிகரிப்பதைக் கண்டு வெள்ளையர்களிடையே பீதி அதிகரித்திருப்பதாகவே கூறப்படுகிறது.

பொதுவாக்காளர் ஜாபிதாவின் படி நேரிடையான தேர்தல் நடத்தும்படி ஆப்பிரிக்கர்கள் கோருகிறார்கள்.

ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் விழிப்பு ஏற்பட்டுவிட்டதென்பதை வெள்ளையர்கள் உணர வேண்டும் என்று, இந்தியர்கள் எச்சரித்திருக்கிறார்கள்.

நிறத்திமிரை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படும் எந்த சமூகமும் நீடித்து நிலைக்காது என்று கென்யா சட்டசபை இந்திய மெம்பர் தோழர் எ. பி படேல் கூறியிருக்கிறார்.

இந்தியர்களும் சுதேசிகளும் தங்கள் போக்கை ஆதரிக்கும்படி ஐ. நா -வுக்கும் இந்திய-பாகிஸ்தான் பிரிட்டிஷ் சர்க்கார்களுக்கும் கூட்டு கோரிக்கையை அனுப்பலாம் என்று கூறப்படுகிறது.

டிட்டோ குடியரசு தலைவர் ஆவார்

லண்டன், ஏப். 26—

யூகோஸ்லாவியா மாபெரும் அரசியல் சீர்திருத்த மாறுதல்கள் சீக்கிரமே ஏற்படும் என்று இங்கு நம்பப்படுகிறது.

இப்பொழுது பிரதமராக உள்ள மார்ஷல் டிட்டோ யூகோ குடியரசு பிரசிடெண்ட் ஆவார். பிரசிடெண்ட் ஆக இருக்கும் பிரதமர் பதவியை இவரே வகிக்கக்கூடும்.

இம்மாதிரி யூனைடெட் ஸ்டேட்ஸில் ஏற்கனவே நடந்திருக்கிறது.

மற்றொரு முக்கியமான மாறுதல் சீர்திருத்த சர்க்கார் ஆதிக்கத்திற்கு உட்படாமல் செய்வது.

ஆறு பெரிய குடியரசுகள் ஏற்படுத்தப்பட்டு, அவைகளுக்கு மத்திய சர்க்காரிடமிருந்து அதிகாரம் வழங்கப்படும்.

சுதந்திர சர்க்காரில் காவற் கைதிகள்!

—————(0)—————

சென்னையில் மட்டும் 500 பேர்

சென்னை, ஏப். 25—

1950-ம் ஆண்டு மார்ச்சு 15-ம் தேதி இந்தியாவின் பல மாகாணங்களில் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை இந்திய அரசாங்கத்தால் தோழர் கெ. ஜி சிவசாமிக்கு அறிவிக்கப்பட்டது. தோழர் சிவசாமி சென்னை சமூக உரிமைச் சங்கத்தின் தலைவர் ஆவார்.

மாகாணவாரி எண்ணிக்கையாவது: மேற்கு வங்காளம் 1031; பம்பாய் 505; சென்னை 479; பஞ்சாப் 249; அஸ்ஸாம் 140; மத்திய பிரதேஷ் 129; உத்திரபிரதேஷ் 114; ஒரிஸா 104; பீஹார் 87; டில்லி 21; அஜ்மீர் 6; மொத்தம் 2865

பற்றாக்குறை ஜில்லாக்களில் பங்கீடு

சென்னை, திருநெல்வேலி, ராமநாதபுரம் ஜில்லாக்களுக்கு தஞ்சை அரிசி

சென்னை, ஏப். 26—

சுமார் 6,000 டன் அரிசி சென்னை நகரத்திற்கென்று மே-மாதத்திற்கு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. இதில் 3,000 டன் தஞ்சாவூரிலிருந்து சென்னைக்கு அனுப்பப்படும்.

இதிலிருந்து சென்னை டி. யு. ஸி எஸ்ஸுக்கு ஒவ்வொரு மாதம் 640 டன் புழுங்கலரிசியும், ஏற்கெனவே உள்ள நெல்லூர் அரிசி ஸ்டாக்கிலிருந்து ஒவ்வொரு மாதம் சுமார் 560 டன் பச்சரிசியும் அளிக்கப்படும்.

மே—மாதத்திற்கு இதர பற்றாக்குறை ஜில்லாக்களுக்கு அனுப்பப்படவிருக்கும் அரிசி:—

ராமநாதபுரம் :—சுமார், 4,700 டன் தஞ்சாவூரிலிருந்து இந்த ஜில்லாவிற்கு அனுப்பப்படும்.

திருநெல்வேலி :—சுமார் 3000 டன் தஞ்சாவூரிலிருந்து அனுப்பப்படும்.

தென் கன்னடம்:—மத்திய பிரதேசத்திலிருந்து இந்த ஜில்லாவிற்கு 5000 டன் எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இது வந்து சேர காலதாமதமாகும் என்று தெரிவதால், சென்னை சர்க்கார் இதர ஜில்லாக்களிலிருந்து சுமார் 3000 டன் அரிசியை இந்த ஜில்லாவிற்கு அனுப்ப ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

ரயில்வேக்களுக்கு அரிசி சப்ளை

தென் இந்திய ரயில்வேக்கு 900 டன் அரிசி மே மாதத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் 100 டன் உத்திர பிரதேசத்திலிருந்தும் 900 டன் ஒரிஸாவிலிருந்தும் வந்துசேரும் ரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள சிற்றுண்டி சாலைகளுக்கு முன்புபோல் ஒவ்வொரு மாதமும் சுமார் 12 டன் அரிசி தஞ்சாவூரிலிருந்து அனுப்பப்படும்

எம். எஸ். எம். ரயில்வேக்கு ஒதுக்கப்பட்டுள்ள சுமார் 1100 டன்களில் 650 டன் உத்தர பிரதேசத்திலிருந்தும் 450 டன் ஒரிஸாவிலிருந்தும் வரும்.

இந்த ரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள சிற்றுண்டிச்சாலைகளுக்கு ஒவ்வொரு மாதமும் 17 டன் அரிசி விஜயவாடாவிலிருந்து கிடைத்து வரும்.

இதர பற்றாக்குறை ஜில்லாக்களுக்கு அரிசி

சென்னை ஜில்லாவிலுள்ள இதர பற்றாக்குறை ஜில்லாக்களுக்கு மே மாதம் அனுப்பப்படும் அரிசி விவரம்:—

செங்கற்பட்டு 3000 டன், வடஆற்காடு 1500 டன். சேலம் 3300 டன் மதுரை 1600 டன், கோயமுத்தூர் 9200 டன், நீலகிரி 300 டன், மலையாளம் 16,900 டன்; அனந்தபூர் 600 டன், பெல்லாரி 800 டன், கடப்பை 200 டன், சித்தூர் 300 டன்.

கல்வித்துறையிலும் தெ. ஆ. இந்தியர்களுக்கு முட்டுக்கட்டை

—————(0)—————

ஆப்ரீகான்ஸ் மொழியில் தேர்ச்சிபெற வேண்டுமாம்

டர்பன், ஏப். 26—

தென் ஆப்பிரிக்க இந்திய மாணவர்கள், தங்கள் ஹைஸ்கூல் ஸர்டிபிகேட்டு சம்பாதிப்பதற்கு முன், ஆப்ரிகான்ஸ் மொழி தேர்வில் பாஸ் செய்தாக வேண்டுமென்று ஏற்படுத்தியிருப்பது அவர்களுக்கு பெரும் இடைஞ்சலாயிருக்கிறதென்று சுல்தான் டெக்னிகல் காலேஜ் பிரின்ஸிபால் லெப்டினல் நடராஜ் கூறினார்.

சென்ற ஆண்டு 800 இந்திய மாணவர்களுக்குமேல் ஆப்ரீகானஸ் மொழியைப் படித்தனர் என்றும், பரீட்சையில் 193 பேர் தான் அனுமதிக்கப்பட்டனர் என்றும், அதில் 6 பேர் தான் பாஸ் செய்தனர் என்றும் அவர் கூறினார்.

மாலை மணி

சென்னை 27—4—50 வியாழக்கிழமை

உண்மை உரையேல்!

இந்திய துணைக்கண்டத்தில் இரு வேறு கலாசாரங்கள் தனித்து வாழ்ந்துவந்தனவென்றும், அவைதாம் திராவிடக் கலாசாரமும், ஆரியக் கலாசாரமும் ஆகும் என்றும், இரண்டும் ஒன்றோடொன்று மோதி, ஒன்றையொன்று வென்ற அளவில் கலக்கத் தலைப்பட்டன என்றும், இங்கேயே இருந்த கலாசாரமாகிய திராவிடக் கலாசாரத்தின் மீது, வந்த கலாசாரமாகிய ஆரியக் கலாசாரம்; சூது—சூழ்ச்சி—வஞ்சகம்—புனை சுருட்டு ஆகிய ஆயுதங்களின் உதவியால் பெரும் அளவுக்கு படையெடுத்து, வெற்றி கொண்டு இங்கு உலாவத் தலைப்பட்டது என்றும், திராவிடக் கலாசாரத்திலிருந்து முக்கிய நல்ல பண்பாடுகளை ஏற்று, ஆரியம் ஓரளவுக்குத் தன்னைத்தானே திருத்திக் கொண்டது என்றும், இவை இரண்டினின்றும் அவற்றோடு சேர்ந்த வேறு பல வெளிநாட்டு முக்கிய கலாசாரங்களினின்றும் பல்வேறு வகையான கலாசாரங்கள் கிளர்ந்தெழுந்தன என்றும், திராவிட கலாசாரத்தின் பெரும் பகுதிக்கூறுபாடு தென்னாட்டிலும், ஆரியக் கலாசாரத்தின் பெரும்பகுதிக்கூறுபாடு வடநாட்டில் காணப்படுகின்றனவென்றும், தென்னாட்டிலேயே ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்களாகத் தங்களைக் கருதிக்கொண்டிருக்கும் ஆதிக்க வகுப்பினரிடத்து, ஆரிய கலாசாரத்தின் பண்புகள் படிந்து கிடக்கின்றன என்றும், இருவேறுபட்ட அந்தக் கலாசாரங்களின் எண்ணங்கள் கலந்தும், கலவாமலும், இன்றும், மக்களிடத்தில் ஓரளவுக்குப் பிரித்துணரும் வகையில் விளங்கி வருகின்றன என்றும் வரலாற்று வல்லுநர்கள் பலரும், நீடு ஆராய்ந்து கண்டுணர்ந்து தெளிவுபடுத்தியுள்ளனர். இவைகள் அவர்களின் ஒரு பெரும் முடிவுகளாக உறுதிப்படுத்தப்பட்டு வந்துள்ளன.

இந்தியத் துணைக்கண்டத்தில், ஆரிய கலாசாரத்தைத் தவிர, வேறு பெரிய கலாசாரம் எதுவும் இருந்தது கிடையாது என்ற முடிவை, எப்படியும் ஏற்படுத்திவிட வேண்டும் என்று, ஆரியத்தைச் சார்ந்த ஆதிக்க வகுப்பினர் வரலாற்றாசிரியர்களாக இருந்தபோது, திராவிடக்கலாசாரத்தின் உண்மைகளை மறைத்தும், மாற்றிக்கூறியும், திருத்தி வைத்தும் மக்களை மறக்கும்படி செய்தும் அழிவு வேலைகளில் ஈடுபட்டுவந்தனர். இன்றும் இருந்து வருகின்றனர். அந்த அழிவுவேலை இன்னமும் தொடர்ந்து நடைபெறுகின்றது. ஆதிக்க வகுப்பினரும், அவர்களுக்கு அடிமை போன ஏமாளிகளான பிறர் சிலரும், பத்திரிகை பலத்தையும், காங்கிரஸ் பலத்தையும் அரசாங்க பலத்தையும், அதிகார பலத்தையும் துணையாகக் கொண்டு, திராவிட கலாசாரத்தை அடியோடு அழித்துவிட்டு, ஆரியக் கலாசாரத்தை "தேசியம்" என்றும், "பாரதம்" என்றும், 'இந்தியக் கலாசாரம்" என்றும், 'இந்து கலாசாரம்" என்றும் பல பெயர்கள் இட்டு நிலைநாட்ட முற்படுகின்றனர். திராவிடர்களில் பெரும்பாலோர் நீண்ட நாட்களாகவே ஏமாளித்தனத்தில் மூழ்கிவிட்டிருக்கும் காரணத்தால், அந்த எத்தர்களின் முயற்சிகள் வேண்டியமட்டும் வெற்றிபெற்றுவருகின்றன!

ஆரியத்தைத் தங்கள் தாய்மையாகக் கருதும் ஆதிக்க வகுப்பினர்தாம் தங்கள் கலாசாரத்தைக் காப்பாற்ற எதுவும் செய்யத் துணிகின்றனர்; ஆனால் ஆரியத்துக்கு அடிமையான அறிவை அடகு வைத்த திராவிட ஏமாளிகள் சிலரும் அவர்களுக்குத் துணை போகின்றார்கள் என்றால், இதைவிட வெட்கக்கேடான செயல் வேறு என்ன இருக்க முடியும்? "ஆரியமாவது, திராவிடமாவது; அப்படியொன்றும் இல்லை" என்று கூறி வரலாற்றையே பொய்யாக்கிவிடப் புறப்பட்டுள்ளனர் தேசியவாதிகளில் சிலர். "ஆரிய—திராவிட கலாசாரங்கள் என்று பிரித்துப் பேசுவது அறிவுடைமையாகாது" என்று பேசும் வக்கிரங்களும் இருக்கிறார்கள். "திராவிடர்—ஆரியர் என்ற இரு பிரிவு என்றுமே இருந்தது கிடையாது" என்று வாதம் பேசும் கிறுக்கர்களும் இருக்கின்றனர். அவர்களுக்கெல்லாம் பல முறைத் தெளிவுரை கூறியும் அவர்கள் தெளிவு பெற்றதாகத் தெரியவில்லை!

திராவிட—ஆரிய கலாசாரத்தைப் பற்றி, உண்மையை அடிப்படையாகக் கொள்ளாமல், தங்கள் விருப்பத்தையே அடிப்படையாகக் கொண்டு காங்கிரஸ் வாதிகள் 'அலசிக்' காட்டுகின்றனர். இந்திய அரசாங்க மந்திரி தோழர் ஆர். ஆர். திவாகர் அவர்களும் இந்தப் பிரச்சினையைப் பற்றி 'அலசி'ப் பார்க்க ஆசைப்பட்டுள்ளார்—திருச்சி வானொலியின் மூலமாக 'அலசி'யும் காட்டுகின்றார்!

"தூய ஆரியமாகவோ, தூய திராவிடமாகவோ இந்தியாவில் இன்று எதுவும் இல்லை. காலஞ்செல்லச்செல்ல இரண்டும் ஒன்றோடு ஒன்று கலக்கவும் ஒன்றிலிருந்து கொடுத்து வாங்கவுமான நிலைமை ஏற்பட்டது. இப்பொழுது இந்தியாவில் வழங்கி வரும் முக்கிய கலாசாரம் ஆரிய-திராவிடம். அல்லது திராவிட — ஆரியம் ஆகும்; எப்படி விருப்பமோ அப்படி அழைக்கலாம்"

என்பது திவாகரின் 'திவ்ய பிரபந்தம்'! ஆரியமோ, திராவிடமோ இருந்ததில்லை என்று வாதிடும் கிறுக்கர் கூட்டத்தில் சேராமல், திராவிடம்—ஆரியம் என்ற இரண்டு கலாசாரங்கள் உண்டு என்ற உண்மையை ஒப்புக்கொள்ளும் அளவுக்குத் தோழர் திவாகர் வந்திருப்பது ஆச்சரியத்திற்குரியதுதான். ஆரிய கலாசாரமும் திராவிட கலாசாரமும் கலந்துவிட்டன என்கிறார்—கலப்பு ஏற்பட்டது என்பது என்னமோ, உண்மைதான். கலப்பு இரத்தத்திலே உடலமைப்பிலே, நிறத்திலே, சில பழக்க வழக்கங்களிலே ஏற்பட்டிருக்கலாமேயொழிய, மொழியிலே கருத்திலே, எண்ணத்திலே இலக்கியத்திலே, கலையிலே, பண்பிலே ஆகிய இவைகளில் உருத்தெரியாமல் கலந்துவிடவில்லை; இவைகளில் இரண்டு கலாசாரங்களும் பிரித்துணரும்வகையில் தான் தனித்தனியாகக் காணப்படுகின்றன. அப்படி இருந்தும், இருக்கும் திராவிட நாகரிகத்தையும், அடியோடு அழித்துவிட்டு, அனைத்தையும் ஆரியமாக்கும் முயற்சியில் ஆதிக்க வகுப்பினர் ஈடுபட்டுள்ளனர் இன்று; அதற்கு ஒத்துஊதும் முறையில் தோழர் திவாகர் சில கூறுகிறார்.

"கலாசாரத்தையும், மக்களையும் திராவிட—ஆரிய அடிப்படையில் பிரிப்பது குற்றமுடையது மட்டுமல்ல, தவறான வழியில் இழுத்துச்செல்வதாகும்"

என்று உபதேசம் புரிகிறார், தோழர் திவாகர், உண்மையை மறந்து.

இருவேறு கலாசாரத்தையும் உணர்த்தக்கூடிய பண்புகள், எண்ணத்திலும், எழுத்திலும், செயலிலும் காணப்படும் போது, ஏன் அவற்றைப் பிரித்துக்காட்ட முற்படக்கூடாது? இரு வேறு கலாசாரங்கள் இருப்பதை மறைத்து, ஒரே கலாசாரமாகிய ஆரியத்தை நிலைநாட்டும் முயற்சியில் ஆதிக்க வகுப்பினர் ஈடுபட்டிருக்கும் காரணத்தால், யாராவது ஒருவர், 'ஆரியம் திராவிடத்தை விழுங்குவதைக் காணீர், திராவிடத்தைக் காப்பாற்ற திரண்டெழுந்து வாரீர்" என்று கூப்பாடு போடவேண்டிய அவசியம் நாட்டில் ஏற்படுகிறது.

ஆரியம் திராவிடத்தை மறைமுகமாக அழிக்கிறது. அந்த அழிவிலிருந்து திராவிடத்தைக் காப்பாற்ற வேண்டுமானால், ஆரிய—திராவிடத்திற்குள்ள வேறுபாட்டையுணர்த்தி, திராவிடத்தின் மேம்பாட்டைக் காட்டி, அதற்கு வர இருக்கும் அழிவைக் கூறி அது வாழவேண்டிய வகையை வெளிப்படையாக எடுத்துக் கூறுவதைத் தவிர வேறு என்ன வழியிருக்கிறது!

கருத்துக்களில், ஆரியம், கொடு விஷத்தை வைத்துக் கொண்டு திராவிடத்தில் இன்னமும் உலாவிக்கொண்டுதானிருக்கிறது. அந்த விஷத் தன்மையிலிருந்து விடுபட்டால் தான், திராவிடம் செழித்து வளர முடியும். திராவிடம் வாழவேண்டும் என்பதிலே நல்ல நாட்டங்கொண்டவர்கள், ஆரியத்தின் அழிவுவேலையைக் குறிப்பிட்டு, அதனை அகற்றப் பாடுபடுகிறார்கள். இது எப்படிக் குற்றமாகும்? எப்படித் தவறான வழியாகும்?

இவற்றையெல்லாம் தோழர் திவாகர் எப்படி உணர்வார்? ஆரியமே அவரை அழைத்துக்கொண்டு வந்திருக்கும் போது—ஆரியத்திற்கு அவர் அணைப்பாக இருக்கும்போது அவரிடத்தில் இந்தத் தெளிவை எப்படிக் காண முடியும்?

திராவிட-ஆரிய கலாசாரப் பிரிவைப் பற்றிப் பேசுவது குற்றம் என்கிறார் மந்திரியார்! அப்படியானால் "உண்மை உரையேல்" என்பதுதான் இன்றைய அரசாங்கத்தின் குறிக்கோளாகுமோ?

முன்னேற்றத்தை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மலையைக்குடைந்துகாட்டைத் திருத்தி. கவினுடைய நாடு நகரங்களையும், நற்சோலைகளையும் ஆக்குபவர்கள் அவர்களே.

இங்ஙனம், பாடு பல படும் அவர்களைச் சமுதாயம் இழிவுபடுத்தி, விலக்கி வைப்பதென்றால், இதனை அவர்களே எத்தனை காலத்துக்குச் சகித்துக்கொண்டிருக்கமுடியும்? பட்டபாட்டுக்குப் பலன்காணுவிடினும்—காணமுடியாவிடினும்—காணுவோம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இல்லாவிடினும் ஏன் இப்படிப்பட்ட இழிநிலை? இதினின்று விடுதலை பெற வேறு மார்க்கமில்லையா என்று எண்ணும் எழுச்சி நிலை, அவர்களுக்கு என்றுமே தோன்றாமலிருக்கும் என்று எதிர்பார்க்க முடியுமா?

அங்ஙனம் எட்டு கோடி மக்களின் எண்ணத்தில் எழுச்சி தோன்றுமேல், அதுவே பின்னர் பொருளாதாரப் புரட்சியாக மாறாமல் வேறு என்ன செய்யும்?

மனித வாழ்க்கையில் காணப்படும உயர்வு, தாழ்வு முதலியவற்றுக்குச் சமுதாய அமைப்பு முறையே காரண என்று சொல்லப்படுவது ஒரு புற மிருப்பினும், இவை அனைத்துக்கும் அடிப்படையாக உள்ளது பொருளாதார நிலையே என்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ இயலாது. பொருளாதார சமத்துவம் என்னும் பரிதி தோன்றிடின் சமுதாய ஏற்றத்தாழ்வு என்னும் பனி தானாகவே விலகும்.

இந்த உண்மையைக் காதில் கொண்டே 'ஹரிஜன முன்னேற்றத்துக்கு ஜாதி இந்துக்கள் குறுக்கே நின்றால், கம்யூனிஸ்டுகளுக்கு இடங்கொடுப்பது போலாகும்" என்று கூறுகிறார் அமைச்சர்.

ஹரிஜன முன்னேற்ற அமைச்சர் என்ற முறையிலே, அமைச்சர் இக் கருத்தினை வெளியிட்டுள்ளார். அதாவது முன்னேற்றங்காண முடிவான மருந்து கம்யூனிசமே என்று உறுதியிட்டுக் கூறுகிறார்.

இஃதே போன்று மற்றத் துறைகளனைத்தையும் ஆராய்ந்து பார்த்தால், நாடு முழுவதும் பொருளாதார சமத்துவத்தையே நாடி நிற்கிறது என்பது புலனாகும். சுருங்கச் சொல்ல வேண்டுமானால், அமைச்சர் பரமேஸ்வரனின் பேச்சு, உயர் ஜாதிக்காரர்களுக்கு அறிவுரையாகவும், ஆட்சியாளருக்கு எச்சரிக்கையாகவும் அமைந்துள்ளது எனலாம்.

லண்டன் துறைமுக ஸ்டிரைக்

பெரும் நடவடிக்கைக் ஆரம்பம்

லண்டன், ஏப். 26—

இப்பொழுது லண்டன் துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்திருப்பது இன்னும் பெரும் நடவடிக்கைக்கு ஒத்திகையாகும் என்றே, பிரிட்டிஷ் அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

ரஷ்யாவுடன் உறவு நிலைமை இன்னும் மோசமானால், இந்த நிலைமை இன்னும் மோசமாகவே இருக்கும் என்று போக்குவரத்து யூனியன் காரியதரிசி ஆர்தர் டேகின் அபிப்பிராயப்படுகிறார்.

லண்டன் துறைமுகத் தொழிலாளர்களில் சாதிவேர்கள்தான் இப்பொழுது வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனர் ஒரு டிவிஷன் துருப்புகள் கப்பலிலிருந்து சாமான்களை இறக்க தயாராக வைக்கப்பட்டிருக்கிறது. (ரூயோம்)

ஹைதீ தீவில் சுகாதாரப்பணி முஸ்தீபு

நியூயார்க், ஏப். 26—

ஹைதி தீவிலிருந்து மலேரியா, டைபஸ், யாவ்ஸ் என்கிற நீக்ரோ வர்களுக்குவரும் வியாதி கொக்கிப் புழுவியாதி ஸ்பிரீசன் சம்பந்தமான (வெனிரியல்) வியாதி இவைகளை ஒழித்துக்கட்ட ஹைதி சர்க்காரும் ஐநாவும் கூட்டாக முயற்சித்து இரண்டு வருஷத்திட்டம் போட்டிருக்கின்றன.

ஹைதி தீவில் இத் திட்டம் முடிந்த பின் அதேமாதிரியாக இந்தோனேஷ்யா எடுத்துக்கொள்ளப்படும் என்றும், பின்னர் ஒவ்வொரு தென் பசிபிக் பிரதேசமாக இத் திட்டத்தில் சேர்க்கப்படும் என்றும் தெரிகிறது.

இனி நடப்பவை

ஆண்டிப்பட்டி:—29—4—50 அன்று தோழர் எஸ். கல்யாண தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள் க. அன்பழகன் மதுரை தங்கராசாமி சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

சென்னை:—புதுப்பேட்டை தி. மு. க. கிளையின் உறுப்பினர் கூட்டம் 28—4—50 வெள்ளிக்கிழமை அன்று மாலை 6 மணிக்கு, கழகக் கட்டிடத்தில் தோழர் பொ. மதிவாணன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

* * *

மேட்டுப்பாளையம்:-28—4—50 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம்நடைபெறும். அதுபோது பாசரானன் அவர்கள் இசைக் கச்சேரிகள் பாவேர் தோழர் சி. பி.சிற்றரசு அவர்களும் மற்றும் பலரும் 'தி. மு. கழகமும் மக்கள் கடமையும்' என்பதுபற்றி பேசுவார்கள்.

* * *

பெருந்துறை:—மாணவர் கன்னெறிக் கழக இரண்டாவது ஆண்டு விழா பஞ்சாயத்து போர்டு ஆபிஸில் 28—4—50 வெள்ளிக்கிழமை மாலை நடைபெறும். தோழர் டி. புருடோத்தம் அவர்கள் தலைமை தாங்குவார். அதுபோது புலவர் பழில செவத்து அவர்கள் மாணவர் குறிக்கோள் என்பதுபற்றிப் பேசுவார்.

* * *

சைதாப்பேட்டை:—மறுமலர்ச்சி சொற்பயிற்சி மன்றத்தின் சொற்பயிற்சிக் கூட்டம் 28—4—50 அன்று மாலை சடையப்ப முதலித் தெருவிலுள்ள 2 செ. இல்லத்தின் மேல்மாடியில்கூடும். அதுபொழுது தோழர் த. சம்பந்தன் தலைமையில், இலக்கியத்தின் இன்பம் என்னும் பொருள் பற்றி பலர் பேசுவர்.

ஜெர்மனியில் அமெரிக்க ஆதிக்கம்

இன்னும் 5 ஆண்டுகளுக்குத் தொடரும்

நியூயார்க், ஏப். 26—
ஜெர்மனியில், யுனைடெட் ஸ்டேட்ஸ் துருப்புகள் இன்னும் ஐந்து வருஷ காலம் தங்கியிருக்கும் என்பது ஜெர்மனியிலுள்ள படைகளுக்குக் கிடைத்துள்ள சில குறிப்புகளிலிருந்து தெரிகிறது.

இது ரஷ்யர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக இருப்பதுடன் மட்டுமின்றி மேற்கு நாடுகளுக்கு வாக்களித்துள்ள உறுதிமொழியை யு. எஸ். நிறைவேற்றும் என்ற நம்பிக்கையையும் இது ஏற்படுத்துவதாக இருக்கிறது.

மேற்கு ஐரோப்பாவுக்கான பொருளாதார உதவித் திட்டங்களை அமெரிக்க அமுல் நடத்தவிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்தியாவுக்கு ஈராக் வர்த்தக தூது கோஷ்டி

பாக்தாத், ஏப். 26—
இந்தியாவிற்கும், ஈராக்கிற்கும் இடையே வர்த்தக உடன்படிக்கை செய்துகொள்வதற்கும் பூர்வாங்கமாக ஒரு தூது கோஷ்டியை இந்தியாவிற்கு அனுப்புவதைப்பற்றி, ஈராக் மந்திரிசபை தன் அடுத்த கூட்டத்தில் முடிவு செய்யும். (ரூட்டர்)

அகில இந்திய ரேடியோ ஐரோப்பிய சர்வீஸ்

லண்டன், ஏப். 21—
அகில இந்திய ரேடியோ பரீக்ஷார்த்தமாக நடத்தும் ஐரோப்பிய சர்வீஸ், மிகவும் பிரபலமாக இருந்து வருவதாக இங்கு செய்தி கிடைத்திருக்கிறது. இந்தியா ஹவுஸ் வெளியீடான இந்தியா நியூஸ் இந்த ஒலிபரப்பு பற்றிய விவரங்களை எல்லாம் பிரசுரித்திருக்கின்றன. எவ்வளவு பேர்கள் இந்த ஒலிபரப்புகளைக் கேட்கிறார்கள் என்ற புள்ளிவிவரம் கிடைக்கவில்லை என்றாலும், இந்தியா ஹவுஸிற்கு இதைப் பற்றி கேட்கப்படும் தகவல்களிலிருந்து ஏராளமானவர்கள் இதை கேட்கிறார்கள் என்றே தெரிகிறது.

ஐரோப்பாவில் இந்திய ஒலிபரப்புகளைக் கேட்பவர்கள் நேரிடையாக 'ஏ ஐ. ஆர். புதுடில்லி'க்கு எழுதும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். (ரூட்டர்)

இன்றியமையா மருந்துகள் கிடைப்பதில்லையாம்

நியூயார்க், ஏப். 2?—
ஸ்டிரெப்டோமிஸின் போன்ற முக்கியமான மருந்துகள் ரஷ்யாவில் இல்லை என்றும், அவைகளை இப்பொழுது யுனைடெட் ஸ்டேட்ஸிலுள்ள மந்திரி இரும்புத் திரை நாடுகளின் பிரஜைகளிடமிருந்து பெறமுயற்சி செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது. (ரூட்டர்)

லாஸ்கி பிரிவிற்கு அனுதாபம்

இந்தியா லீக் ஆதரவில் கூட்டம்

லண்டன், ஏப். 26—
புரொபஸர் ஹெரால்ட் லாஸ்கியின் பிரிவிற்கு அனுதாபம் தெரிவிக்க இந்தியா லீக் காக்ஸ்டன் ஹாலில் மே 1ல் ஒரு கூட்டம் நடத்தவிருக்கிறது.

இதில் ஹைகமிஷனர் தோழர் கிருஷ்ணமேனன், தோழர் ரெஜினால்ட் ஸோரென்ஸன், தோழர் எச். என். பிரெய்ல்ஸ்போர்ட் முதலியவர்கள் கலந்துகொள்வர்.

ரொடீஷியா அதிக புகையிலையை உற்பத்தி செய்கிறது

லண்டன், ஏப். 26—
பிரிட்டனிலிருந்து புகையிலைக்கான ஆர்டர்கள் அதிகமாக வருவதால் புகையிலை உற்பத்தியை ரொடீஷியா அதிகரிக்கும்படி செய்திருக்கிறது.

வட ரொடீஷியாவில் மட்டும் இவ்வருஷம் 7000,000 பவுண்டு புகையிலை உற்பத்தியாகும் எனத் தெரிகிறது.

அபினி கைப்பற்றப்பட்டது

மூன்று சீனர்கள் கைது

சென்னை, ஏப். 25—
சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள ஒரு வீட்டைப் போலீசார் நீட சென்று சோதனையிட்டு 20 தோலா அபினியும், அபின் செய்யும் கருவிகளையும் சிறிதளவு பிராந்தியையும் கைப்பற்றினர். இது சம்பந்தமாக மூன்று சீனர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெஸ்டர்லிங்கை எங்களிடம் ஒப்படையுங்கள்

மலேயா சர்க்காரை இந்தோனேஷ்யா கேட்கும்

சிங்கப்பூர், ஏப். 26—
வெஸ்டர்லிங்கை தங்களிடம் ஒப்படைக்கும்படி இந்தோனேஷ்ய சர்க்கார், மலேயா சர்க்காரை உத்தியோகபூர்வமாகக் கேட்டுக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிங்கப்பூரில் இவர் சட்டவிரோதமாக நுழைந்ததற்காக மார்ச் 8-ந் தேதி சிறையில் வைக்கப்பட்டார். —ரூட்டர்

சிங்கத்திற்கும் புலிக்கும் பிறந்த குட்டிகளை வளர்த்தவர்

ப்ளோம்போன்டீன், ஏப். 26—
ஆப்பிரிக்க ஆண் சிங்கத்திற்கும், வங்க, பெண் புலிக்கும் பிறந்த குட்டிகளை வளர்த்து வந்த நிகோலாஸ் செப்பர் என்பவர் இங்குள்ள உயிர்க் காட்சிசாலையில் ஒரு காட்டு மிருகத்தினால் தாக்கப்பட்டு மாண்டார். (ரூட்டர்)

கைத்தொழிலுக்கு அணுசக்தி

லண்டன், ஏப். 26—
கைத்தொழில் துறையில் அணுசக்தியை உபயோகிக்க முன் வருவது பிரிட்டன்தான் என்றும், சீக்கிரமே இங்கிலாந்திற்குக் கிடைக்குமென்று தெரிகிறது.

மின்சார சக்தியை உற்பத்திச் செய்யும் அணுசக்தி யந்திரங்கள் உற்பத்திச் செய்வது பற்றி இப்பொழுது ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது.

இன்னும் 2, 3 ஆண்டுகளில் இத்தொழிற்சாலை வேலை செய்ய ஆரம்பிக்கலாம்.

மகோதரத்தை குணப்படுத்த புது மருந்து

நியூயார்க், ஏப். 26—
மகோதரம் (வயிற்றிற் நீர் கட்டல்) ஏற்பட்டால் அதைக் குணப்படுத்த புது மருந்து கண்டுபிடித்திருப்பதாக, இரு ரஸாயன ஆராய்ச்சியாளர்கள் பிலடெல்பியாவில் நடைபெற்ற அமெரிக்க ரஸாயனக் கமிட்டிக் கூட்டத்தில் தெரிவித்தனர்.

இதை உட்கொள்ள வேண்டும் என்று சொல்லப்படுகிறது இதற்கு இன்னும் பெயரிடப்படவில்லை.

இது முடிவாக அங்கீகரிக்கப்பட்டுவிட்டால், ஆப்ரேஷன் செய்யவேண்டிய அவசியமே இருக்காது என்று சொல்லப்படுகிறது.

பாலஸ்தீனர்கள்

அரசியல் சீர்திருத்தம் கோடுவர்

அம்மான், ஏப். 26—
ஜார்டனுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள அரபு பாலஸ்தீன பிரதேச பிரதிநிதிகள், அரசியல் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று கோருவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜார்டனுடன் சேரக்கூடாது எதிர்த்த பாலஸ்தீனர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவானதே.

பதிமூன்றுயிரம் பேர் வெளியேறினர்

பிரிடோரியா, ஏப். 26—
பிப்ரவரி மாதத்தில் தென்னாப்பிரிக்காவிலிருந்து 13000 பேர் வெளியேறியிருக்கின்றனர் என்றும், 11000 பேர் குடியேறியிருக்கின்றனர் என்றும், புள்ளிவிவரக் கணக்குகள் தெரிவிக்கின்றன.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

28 - 4 - 50

மேட்டுப்பாளையம்:—(தஞ்சைமாவட்டம்) சி. பி சிற்றரசு
சங்கரநயினர்கோவில்:— ஈ. வே. அ. வள்ளிமுத்து, க. அன்பழகன், எம். எஸ். இராமசாமி, எஸ். லிங்கம்.

29 - 4 - 50

ஆண்டிப்பட்டி:—அன்பழகன், அய்யாச்சாமி.
ஆரணி:— . கே, சீனிவாசன்,

30 - 4 - 50

பவானி:— இரெ. இளம்வழுதி, எஸ். ஆர். சுப்ரமண்யம் ஜி. என். ராஜு.
பொள்ளாச்சி:—அன்பழகன், கிருட்டிணசாமி.
ஆம்பூர்:—ஆசைத்தம்பி.

1 - 5 - 50

மே விழாக் கூட்டங்கள்

சென்னை :—சி. என். அண்ணாத்துரை
மதுரை :—அ. சித்தையன்
கோவை :—இரா. நெடுஞ்செழியன்
பொன்மலை :—க. அன்பழகன், யு. கே. சீனிவாசன்
கோவில்பட்டி :—ஆசைத்தம்பி
ஈரோடு:— மு. கருணாநிதி, எஸ். அப்பாவு, என். ஈ. பாலகுரு எஸ் ஆர் சந்தானம், ஆர் பெருமாள்.

தி. மு. க. தலைமை நிலைய கட்டிட நிதி

		ரூ அ. பை.
முன்வரவு		1333 - 11—0
தி. மு க. அருப்புக்கோட்டை கிளை		25—0—0
,, திருவனந்தபுரம் கிளை		12—6—0
,, வடகோவை கிளை		12—0—0
,, திருவந்தலூர் கிளை		10—0—0
,, திசையன்விளை கிளை		14—0—0
,, சென்னை புதுப்பேட்டை கிளை		10—0—0
வீ. வடிவேல், மதுரை		1—0—0
எஸ் அமானுல்லா, காரைக்குடி		5—0—0
ஜி. வெங்கிடசுவரன்	,,	1—0—0
புரட்சி சித்தன், குன்னூர்		0 8—0
இரா. முனுசாமி,	வளவனூர்	5 - 0—0
மு. முத்துப்பெருமாள்,	,,	5—0—0
கே. ஆழ்வார் நாயுடு,	,,	5—0—0
சுந்தரமூர்த்திப் புலவர்,	,,	2—0 0
கே. அரங்கனூர்,	,,	2—0—0
கே. வி. எஸ். சிவஞானம்,	,,	1 - 0 - 0
பி. ஸி தியாகராஜப் பிள்ளை, சிதம்பரம்		50—0—0
வ. வெள்ளத்தாயம்மாள், விருதுநகர்		1—0—0
சி எம். இராமலிங்கம், கோவை		1—0—0
கே. ராமதாஸ் லட்சுமிபுரம் கிராமம்		1—0—0
பி ஏ. முத்துச்சாமி, பொள்ளாச்சி,		1 - 0 - 0
பி. ஏ. வாசுதேவன்,	,,	1—0—0
ஆர் தண்டபாணி,	,,	1—0—0
எஸ் பெரியசாமி. மாமரத்துப்பட்டி		2—0—0
பெ. பெரியசாமி, திருமங்கலம்		2—0—0
மு. இராமசாமி.		2—0—0
எஸ். காளத்தி, காஞ்சிபுரம்		1—1 - 0
டி. எஸ். அப்பாண்டநாதன், திண்டிவனம்		3—0 - 0
சி. பாண்டுரங்கன்	,,	2—0 - 0
ஏ. தங்கவேலு	,,	2—0—0
கே. துளசிங்கம்	,,	1—0—0
எஸ் பூபால்	,,	1—0—0
நடேசன்	,,	1—0—0
பாலகிருஷ்ணன்	,,	1—0—0
து. ஆதிகேசவன்	,,	1—0—0
அ. அய்யாக்கண்ணு, மதுரை		10—0 - 0
சி சி. பால்சாமி, மதுரை		10—0—0
பி. கே. ராமசாமி, பெரியகுளம்		1—0—0
பி, எம். சவுரிமுத்து, சேதுக்குவாய்த்தான்		2—0—0
பொ. தமிழரசன்,	கோவில்பட்டி	1 0—0
அ. அ. சி. பொன்னுசாமி,	,,	2—0—0
சு ராமையா,	,,	2—0 - 0
எஸ். கே. டி. சாமி,	,,	1—0—0
த. ரத்தினசாமி,	,,	1—0—0
கு. சுப்பையா,	,,	0—8—0
கு புஷ்பலீலா,	,,	0—8—0
கு. சீனிவாசன்,	,,	1—0 0
ஈரால். செல்லையா,	,,	1—0—0
நா. மாரியப்பன்,	,,	1—0—0
வே. குருசாமி	,,	0—8 - 0
வி. ஆர். பி. சர்யாட்சன்	,,	0—8—0
செ. ராஜகோபால்	,,	1—0—0
வி. ராமசாமி	,,	1—0—0
பூ. துரைசாமி	,,	0—8—0
பூ. சக்திவீரன்	,,	0—8—0
மகுடஞ்சாவடி தோழர்கள் செ வையாபுரி மூலம்		10—0—0
		1567—10 0

அணுசக்தி கப்பல் எஞ்ஜின்

யு எஸ். கடற்படை ஆராய்ச்சி

வாஷிங்டன், ஏப். 26—
அணுசக்தி மூலம் இயக்கக்கூடிய கப்பல் எஞ்ஜின் ஏற்படுவது சாத்தியம் என்ற நிலைமை யுனைடெட் ஸ்டேட்ஸ் கடற்படை ஆராய்ச்சியின் மூலம் வெளியாகிறது.

40,000,000 டாலர் அனுமதிக்கப்பட்டால் அணுசக்தி சப்மரீன் கட்டும் வேலையை நாளைக்கே ஆரம்பித்துவிடலாம் என்று பிரதம அட்மிரல் ஷெர்மான் காங்கிரஸ் சபையில் அறிவித்ததாகக் கூறப்படுகிறது.

யு எஸ்-ஸின் புது தினுசு சப்மரைன்

அட்மிரல் ஷெர்மான் 2000 டன் எடையுள்ள புது தினுசான சப்மரைனைக் கட்ட 37,000,000 டாலர் அனுமதிக்கும்படி கேட்டிருக்கிறார், ஆக்ஸிஜனுக்குப் பதில் ஹைட்ரஜன் பெராக்ஸைடு உபயோகிக்க இதில் சாதனம் அமைக்கப்படும் என்று கூறப்படுகிறது.

முகவரி மாற்றம்

ஆ. இராமாமிர்தத்தம்மையார்
C/o எஸ். செல்லப்பா ஷாப்பு,
ரயிலடி மாயூரம்.

* * *

இரெ. இளம்வழுதி,
குறிஞ்சிப்பாடி, தென்னார்க்காடு.

கழக நடவடிக்கைகள்

காஞ்சீபுரம்:—'என்னிடமிருந்து பெற்றுக் கொண்ட உறுப்பினர் பதிவுச்சீட்டுப் புத்தகத்தை இன்றுவரை, திருப்பித்தராமல் இருப்பது குறித்து வருந்துகிறேன். தோழர்கள் உடனே பதிவு வேலையை முடித்து, இந்த வார முடிவுக்குள் திருப்பித் தந்துவிட்டால் மேற்கொண்டு கழக மாநாட்டுக்கான வேலையைக் கவனிக்க நலமாயிருக்கும்' என தி. மு. க. செயலாளர் தோழர் கோ. பெருமாள் வேண்டுகிறார்.

* * *

செங்கொண்டம்:— 23-4-50 மாலை தோழர் பாவசா அவர்கள் இல்லத்தில், கோவிந்ராசு அவர்கள் தலைமையில் தி. மு. கழக வள்ளுவர் சொற்பயிற்சி மன்றக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது "நாட்டின்நிலை", என்னும் பொருள் குறித்து கீழ்கண்ட தோழர்கள் இராசகோபால், தனஞ்சயன், க. க இராமச்சந்திரன், கே. எஸ் காசிம், ஆ. இராமசாமி, நாகராசு, ஆகியோர் பேசினார்கள். தலைவர் முடிவுரைகூற செயலாளரால் நன்றி கூறப்பட்டு கூட்டம் முடிவுற்றது.

* * *

செங்கொண்டம்:—தி. மு. க செயற்குழுக்கூட்டம், 18—5—50 அன்று கூடிற்று அதுபோது செங்கொண்டத்தறிவகத்தவராயிருந்தவரும், தற்போது தி. மு. கழகத்து அங்கத்தினருமாகிய தோழர் மெத்துசலா அவர்களின் வாழ்க்கைத்துணைவியார் யோசப் மெத்துசலா அவர்கள் திடீர் மரணமெய்தியமைக்காக வருத்தம் தெரிவிக்கப்பட்டது.

* * *

திருச்சி:—தி. மு. க. நகர உட்கிளையின் செயற்குழுக் கூட்டம் தோழர் பி. இராதாகிருஷ்ணன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

1. கழகக் கொள்கைகளை மேலிடத்தாரின் (ம. தி. மு. க) அவ்வப்போது அனுப்பும் தாக்கீதுகளை தவறாது பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

2. கட்டாயமாக மாதா மாதம் ஒருசெயற்குழு கூட்டமும், வருடத்திற்கு குறைந்தது மூன்று பொதுக் கூட்டங்கள் நடத்த வேண்டும்.

3. ம.தி.மு.க. கட்டிட நிதிக்கு ரூபாய் பத்து அனுப்பிவைக்க நிதி உறுப்பினர் வீ. புருசோத்தமன் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது.

4. கழகத் தொண்டர்களை மக்களிடையே தீவிரமாக பிரசாரம் செய்ய நகரக் கழகத்தை கிளைக் கழகங்களைக் கூட்டி கூட்டம் நடத்த, நகர கிளைக் கழகச் செயலாளரைக் கேட்டுக்கொண்டு, இதன் நகல் ஒன்று ம.தி.மு.க. செயலாளர் அவர்களுக்கு ஒன்று (அறிக்கை) அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

கூட்டம் தோழர் இராதாகிருஷ்ணன். நன்றி கூற முடிவுற்றது.

* * *

திருப்பத்தூர்:—23—4—50 அன்று காலை தோழர் எம். எஸ். மணி அவர்கள் இல்லத்தில்தோழர் எ. பி. முருகேசன் அவர்கள் தலைமையில் நிர்வாக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. அதுபோது: 18—11—49 5—2—50-ல் நடந்த பொதுக் கூட்டங்களின் வரவு செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒத்துக்கொள்ளப்பட்டது. இருப்பு ரூபாய் பொருளாளர் தோழர் ஆர். எஸ். மணி அவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டது. தோழர் வி. எஸ். பி. மணி அவர்கள் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

வாணியம்பாடி:— 21—4—50 அன்று தி. மு. க. செயற்குழுக் கூட்டம், தோழர் டி. எ. ஆறுமுகம் தலைமையில் கூடி கீழ்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றிற்று.

தற்போது நாட்டில் உணவு நெருக்கடி உள்ளதால், ஏழை விவசாயிகளுக்குப் புறம்போக்கு நிலங்களை வரி விதிக்காமல் பயிரிட அனுமதிதர வேண்டுமென்று சர்க்காரை இக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வூரில் உள்ள தாய் தந்தையற்ற அனாதைப் பிள்ளைகளுக்கு நகர சபையார் இலவச உணவு கொடுத்து, கல்விப் பயிலுவிக்க நகர சபையாரைக் கேட்டுக் கொள்கிறது.

ஏற்கனவே எம். எஸ். எம். புகைவண்டி சென்னூர், சென்னை போகும் வண்டியில் இருந்த சிற்றுண்டிச்சாலையை திடீரென நிறுத்திவிட்டது பொது மக்களுக்கு அதிக கஷ்டத்தைக் கொடுப்பதால், மீண்டும் உடனடியாக சிற்றுண்டிச் சாலைப் பெட்டியை வண்டியில் இணைத்து பொது மக்களுக்கு சிற்றுண்டி வழங்க எம். எஸ். எம் இரயில்வே மேனேசரை இக்கழகம் கேட்டுக் கொள்ளுகிறது.

கழகப்பேச்சாளர்களை அழைத்து ஒரு பொது கூட்டம் நடத்த இக்குழு தீர்மானிக்கிறது

தி. மு. கழகத் தலைமைக் கட்டிட நிதிக்கு இக் கழகம் ரூ. 25—0—0 அனுப்ப தீர்மானிக்கிறது.

தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது. தோழர் தத்தப்பன் முடிவில் நன்றி கூறினர்.

* * *

கோலார் தங்கவயல்—தி. மு. க. செயற்குழுக்கூட்டம் தோழர் கே. எஸ். கோபால செட்டியின் அவர்கள் தலைமையில் 17—4—50 மாலை கழக மனையில் நடைபெற்றது. அதுபோது கீழ்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1 கழகப்பொது அங்கத்தினரான தோழர் கே. என். இன்பதாசன் அவர்களின் உடன்பிறந்தார். கே. என். மாரிமுத்து அவர்களின் மரணம் அன்று, குடும்பத்தாருக்குச் ஆழ்ந்த அனுதாபம்தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மாநாட்டின் ஆக்கவேலைகளைச் செய்யுமாறு விளம்பரச்செயலாளர் தோழர் டீ. கே. சின்னுத்துரை அவர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டது.

மாநாட்டின் வரவேற்பு செயற்குழு அங்கத்தினர்களாக தோழர்கள் டி. கே சின்னுத்துரை, கே. எஸ். கோபால செட்டியன், கே. இராகுலன், கே. ஜி. சின்னாசன். பஷீர், கோபால், கே ஜி பூபாலன் ஆகியோரைக் கொண்ட தோர் செயற்குழு அமைக்கப்பட்டது

மாநாட்டின் தொண்டர்களைக் கவனிக்க தோழர்கள் பெரியசாத்தையன், கே. என். இன்பதாசன் என். சி. சபாபதி, கண்ணன், முனிரத்தினம், இரத்தினம். ஜி. சி. எம். சாமி, சேகரன், ச. இன்பதாசன் ஆகியோர்களைக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

உள்ளூர் தோழர்களன்றி தோழர்கள். ஜீ அப்பாத்துரையார், ஏ. இரத்தினசபாபதி, ஏ.பாக்கியநாதன் ஓவர்சியர் எஸ். முனிசாமி. டி. கே அலைசாமி டி. ஆர். சேகரன் ஆகியோர்களையும் சொற்பொழிவாற்ற கேட்பதெனவும் முடிவாக்கப்பட்டு, மாநாட்டிற்கு வேண்டிய வேலைகளைத் தரிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு தோழர் டி. கே. சின்னுத்துரையவர்கள் நன்றிகூற கூட்டம் இரவு 9 மணிக்கு முடிவுற்றது.

கோவை மாவட்ட தி. மு. க. செயற் குழு கூட்டம்

ஷை செயற்குழுக் கூட்டம் இன்று காலை 10-மணி அளவில் நகர தி. மு. க. கட்டிடத்தில் நடைபெற்றது. அதுபோது மாவட்டத்திலுள்ள செயற்குழு அங்கத்தினர்கள் பலர் வந்திருந்தனர். மாகாண அமைப்புக்குழு செயலாளர் தோழர் என். வி நடராசன் அவர்கள் தலைமை வகித்தார்கள். அதுபோது கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

1. கோவைமாவட்ட அலுவலகம் நகர தி. மு. க. கட்டடத்தில் நடைபெறுவதால், அதன் நிர்வாகசெலவுக்கு மாதமாதம் 10 ரூபாய் கொடுப்பதென முடிவு செய்யப்பட்டது.

2. கோவை மாவட்ட தி. மு. கழகத்தின் சார்பில் வரும் மே மாதம் 27, 28, தேதிகளில் முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டை கோவையில் நடத்துவதென இக்கமிட்டி தீர்மானித்திருக்கிறது.

3. மாநாட்டு வரவேற்பு கழக உறுப்பினர்களாக மாவட்ட செயற்குழு அங்கத்தினர்களே இருப்பதெனவும், ஒவ்வொரு உறுப்பினரும் வரவேற்புக் கட்டணம் ரூபாய் 5 கொடுக்க வேண்டுமென்றும், மேற்கொண்டு வரவேற்பு குழு உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு இக்கமிட்டிக்கு அதிகாரம் அளிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

4. வரவேற்புக் குழு தலைவராக தோழர் ஈ. வெ கி. சம்பத் அவர்களையும், செயலாளராக திருப்பூர் எஸ். ஆர். சுப்ரமணியம் அவர்களையும், உதவிச் செயலாளர்களாக தோழர்கள் எஸ்.எ. ராஜமாணிக்கம், கோபி ஜி என். ராசு அவர்களையும், பொத்தாம்பாளையம் தோழர் பி முனிச்சாமி அவர்களைப்பொருளாளராகவும், தோழர் சி. வி. கோபாலன் விளம்பர அதிகாரியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது

5. மாநாட்டுத் தொண்டர் படைத் தலைவராகத் தோழர் கே. சிவசாமி அவர்களையும், உதவித் தலைவர்களாகத் தோழர்கள் ஆதிசிவம், பொள்ளாச்சி பி. என். ராமானுசம் அவர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

6. மாநாட்டுத் தலைவராக புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் இருப்பதற்கு ஒப்புக் கொண்டதற்கு மகிழ்ச்சி தெரிவிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

7. மாநாட்டு வேலைகளை நடத்துவதற்கும், அதற்கான மற்ற காரியங்களைச் செய்வதற்கும் வரவேற்புக்குழு நிர்வாகிகளுக்கு இக்கமிட்டி அதிகாரம் அளிக்கிறது. தலைவர் முடிவுரையும், செயலாளர் நன்றிகூறலுடனும் மீட்டிங் இனிது பிற்பகல் 1 மணிக்கு முடிவுற்றது

குறிப்பு:—மாநாடு சம்பந்தமான எல்லாக் கடிதப் போக்குவரத்துகளும் மாநாட்டுக் காரியாலயம் 8/20 'ஸ்டார் பில்டிங்' ஒப்பணக்காரவீதி கோவை. என்ற முகவரிக்கு வைத்துக்கொள்ளும்படி கோருகிறோம்.

சி. கோபாலன்
விளம்பர அதிகாரி.

மே நாள் விழாக் கொண்டாட்டம்



அமெரிக்காவில் மே நாள் குழந்தைகளின் நலம் காக்கும் நாளாகவே கருதப்படுகிறது 1923-லிருந்து குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டு தொத்து நோய்த் தடுப்பு ஊசி போடப்படுகிறது. ஒரு குழந்தைக்கு இலவசமாக ஊசி போடுவதைப் படத்தில் காணலாம்.

நல்லபாம்பின் விஷம் நல்ல மருந்து!

—(0)—

குஷ்டம், புற்றுநோயைக் குணப்படுத்த முடியுமாம்

கேப்டவுன், ஏப். 26—

நல்லபாம்பின் விஷம் சிறந்த மருந்தாக உபயோகப்படக் கூடியது என்பதை, அமெரிக்காவில் மியாமி சர்வகலாசாலையைச் சேர்ந்த தோழர் வில்லியம் ஹாஸ்ட் என்பவர் கண்டுபிடித்திருக்கிறார்.

இந்த விஷத்தில் கொஞ்சம் எடுத்து, அந்த அளவைப் போல் 5000 மடங்கு அதிகமான தண்ணீருடன் கலந்து இன்ஜெக்ஷன் செய்தால், வலி தெரியாமல் செய்ய முடிகிறதென்று அவர் கூறுகிறார்.

வயிற்று ஆபரேஷன் கேஸ்களில் தசைகளைத் தளரச் செய்யவும். இந்த நல்லபாம்பு விஷ இன்ஜெக்ஷன் தரலாமாம்

நல்ல பாம்பின் விஷத்தைக் கொண்டு புற்றுநோய், குஷ்டம் முதலியவைகளைக் குணப்படுத்தமுடியும் என்று சொல்லப்படுகிறது இது பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக கேப் மாகாணத்திலிருந்து பிடிக்கப்பட்ட சுமார் 400 நல்ல பாம்புகள் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன

தென் பஸிபிக் மாநாடு

அரசியல் நோக்கம் இல்லை

லாவா (பிஜி) ஏப் 26—

இப்பொழுது இங்கு நடைபெறும் முதல் தென் பஸிபிக் மாநாட்டில், தென் பஸிபிக் தீவுகளின் மக்கள் பிரதிநிதிகளாக சுமார் 60 பேர்களுக்கு மேல் கலந்து கொண்டிருக்கின்றனர். இம் மாநாட்டை ஆரம்பித்து வைத்த பிஜி கவர்னர் இது தென் பஸிபிக்கின் பார்லிமெண்ட்டன்று, தென் பஸிபிக் சரித்திரத்திலேயே இம் மாதிரி மாநாடு இதுவரை நடந்ததில்லை என்றும் கூறினர்.

இந்த மாநாடு மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை கூடுவதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது இம்மாநாடு அரசியல் நோக்கம் கொண்டதல்ல, தீவுகளின் மக்கள் தங்கள் தேவைகள் அபிவிருத்தி யோசனைகள் முதலியவைகளை வெளியிட சந்தர்ப்பம் அளிப்பதே இம்மாநாட்டின் நோக்கமாம்.

மது விலக்கு வெற்றிபெறலாம்

தோழர் கிரி நம்பிக்கை

கொழும்பு, ஏப், 25—

ஆசியாவில் மதுவிலக்கு நிச்சயமாக வெற்றிபெறும் என்று இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனர் தோழர் வி. வி கிரி இன்று ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

காந்தியார் இன்று உயிருடனிருந்தால் ஐ. நா. ஸ்தாபனத்தின் இணையான அந்த பணமாக செய்திருப்பார் என்றும் அவர் மறைவு உலகிற்கே பெருத்த நஷ்டம் என்றும், அவருக்கு மரியாதை தெரிவிக்க நாம் அவர் லட்சியத்தை நிறைவேற்றிவைக்க வேண்டுமென்றும் அவர் கூறினர்.

தி. மு. க. கிளைக் கழக அமைப்பாளர்களுக்கு

கிராம — நகர உட்கிளைக் கழகங்களை நிறுவ விரும்பும் தோழர்கள், முன்னதாகவே நகரக் கழகம் அல்லது மாவட்டக் கழகத்தினரிடம் அனுமதி பெற்று நிறுவ முனைய வேண்டும்.

குறைந்தது 25 உறுப்பினர்களையாகிலும் பதிவு செய்தபின்னரே, அவர்களிலிருந்து கிளை முகக் குழுவைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

இதன்படி நிறுவப்படாத கிளைக் கழகங்களை, அதிகாரபூர்வமாக தலைமைநிலயத்தில் ஏற்றுப் பதிவு செய்யப்படமாட்டாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என். வி நடராசன்,
செயலாளர்,
அமைப்புக் குழு.
தலைமைநிலயம்.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street, Madras-1.